டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 15.03.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 221 - Madurai | Online Edition

## தமிழகத்தில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 14

மேற்கு இந்திய பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய மாலத்தீவு பகுதிகளிலிருந்து தெற்கு கேரளா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக வரும் மார்ச் 17 முதல் 19ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என வானிலை மையம் தெரிவித்து உள்ளது.



# விவசாயிகளுக்கு விதை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி




விருதுநகர், மார்ச் 14

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரத்தில், கோவிலாங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் அறிவியல் நிலையத்தில் (KVK) மார்ச், 10ல் நடந்த எண்ணெய்வித்துப் பயிர்களில் பட்டியலின உழவர்களுக்கான பங்கேற்பு முறை விதை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சியில் நரிக்குடி மற்றும் பல்வேறு கிராம விவசாயிகள் மற்றும் மதுரை வேளாண்மை கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டனர். இதில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்வி தலைமை ஏற்றார்.






அப்பயிற்சியில் TNAU கடலை ரிச் இலைவழி தெளித்தல் முறை, தென்னை டானிக் பயன்பாடு, வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் பூச்சி ஒழிப்புமுறை பற்றி கூறப்பட்டது. கடலையில் விதை நேர்த்தி செய்து காட்டப்பட்டது.

மார்ச்,11 அன்று நடந்த முருங்கையில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களில் திறன் மேம்பாடு பயிற்சியில் செட்டிகுறிச்சி மற்றும் நரிக்குடி விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுடன் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகளும் கலந்து கொண்டனர். முருங்கை சாகுபடி, முருங்கையின் உடல் ஆரோக்கிய நன்மைகள் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் நுட்பங்கள் பற்றி விளக்கப்பட்டது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், மார்ச் 14

மிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சிறுதானியங்களிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 18.03.25 மற்றும் 19.03.25 ஆகிய நாட்களில் நடைபெறும். சிறுதானிய வகைகளான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை, தினை, பனிவரகு போன்றவை மக்களால் உணவில் ஓரளவு சேர்த்துக் கொள்ளப்படுகிறது. நகர்ப்புறங்களில் கேழ்வரகு மட்டும் பயன்பாட்டில் உள்ளது. சிறுதானிய வகைகளில் உள்ள சத்துக்களையும் அவற்றை உபயோகித்து தயாரிக்கப்படும் கீழ்க்காணும் மதிப்பூட்டப்பட்ட தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அவையாவன

- பாரம்பரிய உணவுகள்
- பிழிதல்
- அடுமனைப் பொருட்கள்
- உடனடி தயார்நிலை உணவுகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- ஐுஎளுகூ 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (வாயில் எண் 7, மருதமலை சாலை) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,கோயம்புத்தூரில், காலை 9 மணி முதல் மலை 5 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயபுத்தூர் - 641003. அலைபேசி எண் : 94885 18268, தொலைபேசி எண் : 0422-6611268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைபள்ளி நடைபெற்றது

மதுரை, மார்ச் 14

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி ஜோதில்நாயக்கனூர் கிராமம் மீனாட்சிபுரம் உட்கிராமத்தில் துவக்க விழா நடைபெற்றது.

இதில் துணை வேளாண்மை அலுவலர் குமரப்பன் தலைமை ஏற்று தலைமையுரையாற்றினார். மேலும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் மற்றும் உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் பற்றி எடுத்துரைத்தார்.




வேளாண்மை அலுவலர் (ஓய்வு) அமில விதை கடினப் படுத்துதல், கோடை உழவு, விதை நேர்த்தி செய்வது குறித்த தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துக்கூறினார். முன்னோடி விவசாயி பேசுகையில், வேப்பம் புண்ணாக்கு, நுண்ணூட்ட உரம் போன்றவற்றை அடி உரமாக பயன் படுத்துதல் பற்றியும் மற்றும் இயற்கை விவசாயம் பற்றியும் எடுத்துக்கூறினார்.

வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி குள்ளபுரம் தேனி மாணவர்கள் விவசாயிகளுக்கு விதைநேர்த்தி செய்தல் பற்றியும், சோலார் விளக்குப்பொறி பற்றியும், பருத்தியில் அதிக அடர்த்தி நடவு முறை பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்கள். உதவி தொழில் நுட்ப மேலாளர் ராஜேந்திரன் மற்றும் ராஜகோபாலன் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தனர் மற்றும் விவசாயிகள் பதிவேற்றம் பற்றி எடுத்துரைத்தனர். இறுதியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜோதிலட்சுமி நன்றியுரை கூறினார். இப்பயிற்சியில் 25க்கும் மேலான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 14.03.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 16 | 20 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 16 | 20 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 22 | 28 | 57A | உருளை(ஊட்டி) | 20 | 38 |
| 2 | வெண்டை | 30 | 36 | 58 | மேரக்காய் | 16 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 10 | 13 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 10 | 14 | 60 | கேரட் | 44 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 35 | 40 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 55 | 60 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 20 | 25 |
| 7 | பீர்க்கன் | 30 | 36 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 12 | 16 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 30 | 35 | 66 | காளிபிளவர் | 25 | 30 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 70 | 74 |
| 12 | அரசாணி | 10 | 14 | 68 | பூண்டு | 80 | 100 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 26 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 20 | 26 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 30 | 35 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 64 |
| 16 | பெ.வெங்காயம் | 20 | 25 | 72 | குடமிளகாய் | 40 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | ஊட்டி அவரை | 100 | 110 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | | | | |
| 19 | முருங்கை | 45 | 50 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 85 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 35 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 30 | 38 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 80 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 58 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 18 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 70 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 40 | 45 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 58 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 40 | 45 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 15 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 28 | 96 | நேந்திரன் | 60 | 64 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 14 | 18 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 20 | 24 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 55 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 28 | 102 | நெல்லிக்காய் | 60 | 70 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 32 | 36 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 16 | 20 | | | | |

# பயிர்களில் நீர் மேலாண்மை குறித்து பயிற்சி நடைபெற்றது




திருச்சி, மார்ச் 14

கடந்த 13.3.25 அன்று வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி தலைமையில் திருச்சி மாவட்டம், திருவாசி நூலக கட்டிடத்தில் தமிழ்நாடு நீர் வள நில வள திட்டத்தின் கீழ் பயிர்களில் நீர் மேலாண்மை குறித்து பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராணி திட்ட விளக்க உரை ஆற்றினார்.

சிறுகமணி KVK இனண பேராசிரியர் ராஜன் பாபு நீரின் முக்கியத்துவம் பயிரின் நிலைக்கு ஏற்ப நீரை பயன்படுத்துதல் குறித்து உரை ஆற்றினார். சிறுகமணி KVK பண்ணை மேலாளர் ராதாகிருஷ்ணன் பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் வேளாண்மை அலுவலர் தேசிங்கு ராஜா நன்றி உரை ஆற்றினார். பிற துறை சார்ந்த அலுவலர்களும் இதில் கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த திட்டங்களை எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர் பார்த்திபன் செய்திருந்தார்.

தனலெட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் சுற்றுப்புற சூழல் சீரமைப்பு குறித்த விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி நடை பயணம் மேற் கொண்டனர்.

உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டு பொறி வைத்தல் குறித்து செயல்வடிவம் செய்து காட்டினர்.

தந்தை ரோவர் வேளாண் கல்லூரி மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் வேளாண்மை இறுதி ஆண்டு மாணவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அதன் அவசியம் பற்றி பள்ளி மாணவர்களுக்கும், கிராம மக்களுக்கும் மர கன்றுகள் வழங்கி எடுத்துரைத்தனர். முன்னோடி விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பயறு வகைப் பயிர்களில் விதைத் தரத்தை மேம்படுத்தும் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள்



விருதுநகர், மார்ச் 14

விருதுநகர் மாவட்டத்தில் பயறு வகை பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் பயிறு சாகுபடியானது அதிக அளவில் அருப்புக்கோட்டை, சாத்தூர், வெம்பக் கோட்டை, ரெட்டியபட்டி, விருதுநகர் மற்றும் வத்திராயிருப்பு வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1. ஈரப்பதம் பராமரிப்பு**

தற்பொழுது அறுவடை செய்யப்படும் பயறுவகை பயிர்களின் விதைகளானது மழை மற்றும் பனிப்பொழிவின் காரணமாக இயல்பாகவே அதிக ஈரப்பதத்துடன் காணப்படும் என்பதால் விதையின் தரத்தை கெடாமல் பாதுகாக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள 9% ஈரப்பதத்திற்கும் குறைவாக பராமரிக்கப்பட வேண்டும். இந்த ஈரப்பதத்திற்கு கொண்டுவர விவசாயிகள் நன்கு வெயிலில் உலர்த்திட வேண்டும். மேலும் விதைத்தரத்தை பராமரிப்பதோடு மட்டுமன்றி அறுவடை காலத்தில் விற்பனை செய்யப்படும் போது கிடைக்கும் விலையைக்காட்டிலும் பயறு வரத்துக் குறைவாக உள்ள காலங்களில் விவசாயிகள் விற்பனை செய்யும் போது அதிக விலை கிடைக்கும். அதற்கு ஈரப்பதத்தை சரியான அளவில் பராமரித்தால் மட்டுமே நீண்ட காலத்திற்கு சேமிக்க இயலும் என்பதால் ஈரப்பதம் அளவானது கண்டிப்பாக பராமரிக்கப்பட வேண்டும்.

● ஈரப்பதத்தினை பராமரிக்க பயறு வகைகளை நன்கு உலரவைக்கப்பட்ட கோணிச் சாக்குகளில் பிற ரகம் மற்றும் பிற பயிர்களின் விதைகளை சுத்தம் செய்த பின்பு பயன்படுத்த வேண்டும்.

● சேமிக்கும் கிடங்குகள் அல்லது அறைகளின் சுவரை ஒட்டாமலும் ஜன்னல் பகுதிக்கு அருகில் இல்லாமலும் அடுக்கி வைக்கப்பட வேண்டும்.

● தரைப் பகுதியில் நேரடியாக அடுக்கி வைக்காமல் மரச்சட்டங்களில் அல்லது பிளாஸ்டிக் சட்டங்களின் மீது 5 முதல் 6 வரிசை உயரத்திற்கு குறைவாக அடுக்கி வைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஈரப்பதம் அதிகரித்து விதையின் முளைப்புத் திறன் பாதிக்கப்படும்

**2. பூச்சி தாக்குதல்– பாதுகாப்பு**

பயறுவகை தானியங்களை பொருத்தமட்டில் புருச்சீட் எனப்படும் பயறு வண்டுகள் இனமான கலோசோபுரூச்சஸ் வண்டுகள் அதிக அளவில் தாக்குகிறது. மேலும் சில பூஞ்சாணம் மற்றும் பேன் இனங்களும் தாக்குகிறது. இப்பூச்சிகளானது தனது யூரியா அமிலங்கள், இறந்த உடல் பகுதிகள் மற்றும் பயறுகளை உண்டு சேதப்படுத்துவதன் மூலம் விதையின் முளைப்புத்திறன் பாதிக்கப்படுவதோடு எடைக்குறைவு ஏற்பட்டு உபயோகப்படுத்த இயலாத நிலையை உண்டாக்குகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



## பூச்சி நோய் தாக்குதல் வராமல் தடுப்பதற்கான முன்னேற்பாடு முறைகள்

- சேமிக்கும் அறைகளை எப்போதும் சுத்தமாகவும் காற்றோட்டம் இருக்குமாறும் பராமரித்தல்.
- விதைகளை கரடுமுரடான பரப்புகள் கொண்ட செங்கல்தூள், செம்மண் மற்றும் மரத்தூள் போன்றவற்றை கலந்து வைத்தல்.
- விதைகளின் மீது வழுவழுப்பான பொருட்களான எண்ணெய் போன்ற திரவங்களைத் தடவி வைத்தல்.
- விதைகளின் ஈரப்பதத்தினை 8-9%க்கும் மிகாமல் பராமரித்தல்.
- விதைகளை சேமிக்கும் முன் சுமார் 60 டிகிரி வரையிலான வெப்பத்திற்கு உட்படுத்தி பூச்சிகளின் முட்டைகளை அழித்தல்.




- சேதாரமற்ற சுத்தமான விதைகளை தரம் பிரித்து சேமிப்பதன் மூலம் விதையின் முளைப்புத் திறன் சந்தை விலை உயர்ந்து நல்ல இலாபம் ஈட்டலாம்.
- சேமிக்கும் அறையில் குளிர் காற்றோட்டம் இருக்கும் வண்ணமும் அறை வெப்ப நிலை 25 டிகிரிக்கும் குறைவாக இருக்கும் வண்ணம் பராமரிக்க வேண்டும்.

எனவே விவசாயிகள் அனைவரும் பயிர் அறுவடையின் போதே மேலே குறிப்பிட்ட வழிமுறைகளை தவறாது பின்பற்றி விதையின் முளைப்புத்திறன் விதைத்தரம் மற்றும் எடை இழப்பினை குறையாமல் பாதுகாத்திட வேண்டும். மேலும் விதையின் ஈரப்பத அளவினை தெரிந்து கொள்ள விதைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் ம.மகாலெட்சுமி மற்றும் வேளாண் அலுவலர் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் விபரங்களை தெரிந்து கொள்ள 98944 21833 என்ற கைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நாட்டு மரங்களை தேக்கு மரங்களாக மாற்றும் ஜப்பானிய தொழில்நுட்பம் தெரியுமா?



பொதுவாக நம்முடைய வீடுகளில், தலைவாசல் நிலைக் கதவு, ஜன்னல் போன்றவற்றை விலை உயர்ந்த தேக்கு ரோஸ்வுட் சிவப்பு சந்தன மரம் போன்றவற்றை தான் பயன் படுத்த அனைவரும் விரும்பு வார்கள். இந்த மரங்கள் அரிதாக கிடைப்பதாலும் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும் இதற்கு மாற்றாக நாட்டு மரங்களான புங்கன், நீர்மருது, வேம்பு, பூவரசு, பலா போன்ற மரங்களின் பயன்பாட்டை தேக்கு மரத்திற்கு ஈடாக மாற்றும் நவீன தொழில்நுட்பத்தை வனத் துறையும் ஜப்பானிய தொழில்நுட்பமும் இணைந்து உருவாக்கி உள்ளது.

**நாட்டு மரங்களை கதவு ஜன்னலுக்கு ஏன் பயன்படுத்துவ தில்லை?**

பொதுவாக நாட்டு மரங்களின் பலகையில் கதவு ஜன்னல் தயாரித்தால் அவை வெயில் காலத்தில் சுருங்கியும், மழைக் காலத்தில் வீக்கமாகவும் மாறிவிடும். இதனால் அவைகளை பூட்டுவதற்கு சரிபட்டு வாரது. இதற்கான காரணம் கதவு ஜன்னல் பலகை வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தும் போது குறைந்த பட்சமாக 10-12% ஈரப்பதம் இருக்க வேண்டும். ஆனால் நாம் மரத்தை வெட்டி முறையாக காயவைப்பது கிடையாது. அவசர அவசரமாக மரத்தை அறுத்து பலகையாக மாற்றுகிறோம். (மரத்தை வெட்டும் போது 60-70% ஈரப்பத மாக இருக்கும்) வெயிலில் காய வைத்தால் அதுவும் 30% ஈரப்பதமாக தான் மாறும். இதை 10% ஈரப்பதமாக மாற்ற வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### பதப்படுத்துவது எப்படி?

தேக்கு சிவப்பு சந்தனம் சால் ரோஸ்வுட் போன்ற 4 மரங்களின் குணம் கொண்ட மரங்கள் நம்முடைய ஊரிலே, அதுவும் விலை மலிவாக தான் கிடைக்கிறது. அவற்றை ஜப்பானிய தொழில்நுட்பத்தால் பதப்படுத்துவது குறித்து விரிவாக பார்ப்போம்.

முதற்கட்டமாக மரப்பலகை துண்டுகளை குறைந்தது ஒரு வாரம் தண்ணீரில் ஊற வைத்து, பின் உருளை வடிவிலான இயந்திரத்தின் துணை கொண்டு ஈரப்பதத்தை கட்டுப்படுத்த வதற்காக குறைந்தது 2-6 நாட்களுக்கு மரங்களை காற்றின் அழுத்தம் மற்றும் 100 டிகிரி வெப்ப நிலையில் காயவைத்து, ஈரப்பதம் குறைக்கப்படும். ஈரப்பதம் குறைந்த பின்னர், ஈரப்பதம் தன்மைகேற்ப குரோமேட், காப்பர் ஆர்சனேட் / காப்பர்




குரோம், போரான் மற்றும் போரிக் அமிலம் போன்ற பல்வேறு வேதி பொருட்களை பயன்படுத்தி வெப்பத்தால் மரங்கள் நன்றாக உலர்த்தபடும். இந்த முறையில் ஒரு மரத்தை பதப்படுத்தினால், சாதாரணமாக ஒரு மரப்பலகை 5 ஆண்டு வரை பயன்பாட்டில் இருக்குமானால் இந்த மாதிரியான தொழில்நுட்ப முறையில் பதப்படுத்தினால் 25-30 ஆண்டுகள் பயன்பாட்டில் இருக்குமென ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் இந்த மரங்கள் கரையான், பூஞ்சை தொற்று ஏற்படாது.

மேலும் மரத்தை பலகை இழைக்கும் போது முழுமையாகவும் எளிதாகவும் இருக்கும். இதற்கான சோதனை ஓட்டம் தஞ்சாவூரில் தமிழக வனத்துறையும் ஜப்பானிய நிறுவனமும் மேற்கொண்டது குறிப்பிடதக்கது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

**தமிழகத்தில் வேறு எங்கெல்லாம் இந்த தொழில்நுட்ப பயன்பாட்டு மையங்கள் தொடங்க உள்ளன?**

மரங்களை பதப்படுத்தும் மற்றும் மேம்பாட்டு மையங்கள், ஜப்பான் சர்வதேச கார்ப்ரேசன் நிதியுதவியுடன் கூடிய தொழில்நுட்பத்தோடு, ஆலைகள் தஞ்சாவூர், திண்டுக்கல்,

கன்னியாகுமரி, சேலம், திருநெல்வேலி மாவட்டங்களில் முதற்கட்டமாக விரைவாக செயல்பாட்டிற்கு வருமென வனத்துறை கூறியுள்ளது. மக்களுக்கு தேக்கு மரத்திற்கு ஈடாக தங்களுடைய கனவு இல்லத்திற்கு தேவையான கதவு ஜன்னல் மற்றும் மரசாமான்களை குறைந்த விலையில் வாங்கி பயன்படுத்துவதோடு தேக்கு போன்ற விலைமதிப்பான மரங்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# கிராமப்புற பணி அனுபவத் திட்டம் மூலம் ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு நிகழ்த்திய வேளாண் கல்லூரி மாணவிகள்

மதுரை, மார்ச் 14

மதுரை வேளாண் கல்லூரி அருப்புக் கோட்டை குழு மாணவிகள் கிராமப்புற விவசாய பணி அனுபவத் திட்டம் மூலம் ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு நிகழ்த்தினார்.







விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டையில், காலை பத்து மணியளவில் வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரவள்ளி வழிகாட்டுதலின் பெயரில் மதுரை வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த, இறுதி ஆண்டு மாணவிகள் S.ஹர்சினி, R.ஜெய ரூபஸ்ரீ, S.சுமையா ஆகிய மூவரும் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத் திட்டத்தின் கீழ் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கிராமத்திற்கு (சேதுராஜபுரம், வதுவார்பட்டி , போடம்பட்டி) சென்று பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு மூலம் கிராமத்தின் வரைபடம், வரிசைப் பயணம் பருவகால நாட்காட்டி மற்றும் காலக்கோடு போன்றவற்றை வரைந்து அக்கிராமத்தின் வளங்கள், வரலாறு, பயிர் சாகுபடி மற்றும் விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்தனர்.



100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின் தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் RKVY-RAFTAAR-R-ABI-SAIP மற்றும் NIDHI-PRAYAS-ன் மானியம் வழங்கும் விழா

கோயம்புத்தூர், மார்ச் 14

மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை - (GOI-DST) நிதி உதவியுடன் இயங்கி வரும் தொழில் நுட்ப வணிக காப்பகமானது வேளாண் சார்ந்த தொழில் முனைவோர்கள், விவசாயிகள், மாணவர் தொழில் முனைவோர் களுக்கு வழிகாட்டியாக 2011 முதல் திகழ்கிறது.



மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் கீழ் RKVY-RAFTAAR-R-ABI-SAIP மற்றும் NIDHI-PRAYAS-ன் மானியம் வழங்கும் விழா 13.3.25ம் தேதியன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் V.கீதாலட்சுமி, தலைமை தாங்கி மானியங்களை வழங்கினார். மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான SAIP Cohort – IV 10 மானியதாரர் களுக்கு ரூ.81.60 இலட்சம் மானியம் வழங்கினார்.

மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை - (DST) நிதி உதவியுடன் NIDHI-PRAYAS திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 தொழில் முனைவோர்களுக்கு தலா ரூ10.00 இலட்சம் மானியம் இரண்டு தவணையாக வழங்கப் படும். முதல் தவணை மானியமாக 30.00 இலட்சம் தேர்ந் தெடுக்கப்பட்ட தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பதிவாளர் முனைவர் R.தமிழ்வேந்தன், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குநர் முனைவர் E.சோமசுந்தரம், செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி A.V.ஞானசம்பந்தம் மற்றும் ABIS செயற்குழு உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

இவ்விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் V.கீதாலட்சுமி அவர் தனது உரையில் இளம் பட்டதாரிகளை வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் நிலையான மற்றும் இலாபகரமான விவசாய வணிகத்திற்காக புதிய தொழில்நுட்பங்களை புதுமைப்படுத்தவும் செயல் படுத்தவும், விவசாயம் சார்ந்த தொழில் முனைவோர்களை வழிகாட்டும் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.

இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற்ற தொழில்முனைவோர்கள் தங்கள் மானியத்தை வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.




# இலவச கால்நடை மருத்துவ முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

இராமநாதபுரம், மார்ச் 14



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், சூடியூர் கிராமத்தில் கமுதி நம்மாழ்வார் வேளாண்மை கல்லூரி சார்பில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடத்தபட்டது. இதில் ஊர் மக்கள் அனைவரும் தங்களது கால்நடைகளுடன் வந்து கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# நிலக்கடலை சாகுபடியில் ஊட்டச்சத்து கலவை தெளித்தால் 3 மூட்டை கடலை கிடைத்தது?



விருதுநகர், மார்ச் 14

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி வட்டாரத்திலுள்ள குறவைகுளம் கிராமத்தை சேர்ந்த பஞ்சக்கிளி, த/பெ.முருகன் இவர் முற்போக்கு பெண் விவசாயி. இவர் சிசிடி, எப்.பிஓ (FPO) யில் ஸ்ரீ காளியம்மன் கலச உறுப்பினர், தன்னுடைய நிலத்தில் கார்த்திகை பட்டத்தில் மானாவாரியாக 0.75 சென்ட் நிலப்பரப்பில் டி.எம்.வி 7 நிலக்கடலை சாகுபடி செய்துள்ளார்.

தன்னுடைய நிலத்தில் வழக்கமாக 7 மூட்டை கடலை தான் வரும். இந்த ஆண்டிலே இலவச செயல்விளக்கமாக சிசிடியின் அங்கமான பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் அக்ரி கிளினிக்யின் விவசாய ஆலோசகர் சந்திர சேகரன் மற்றும் கள பணியாளர் பிரியா & பரதன் சி ஆர்பி ராமலட்சுமி மற்றும் சி.இ.ஓ பார்த்த சாரதி மூலமாக ஊட்டச்சத்து கலவை கிட்டை உபயோகித்து செயல் விளக்கமாக செய்துகாட்டியதன் விளைவாக தனக்கு கூடுதலாக 3 மூட்டை கடலை வந்ததாக தெரிவித்து உள்ளார். மேலும் இந்த ஊட்டசத்து கலவை பற்றி பஞ்சக்கிளி கூறுகையில், நாங்க வானம் பார்த்த விவசாயிகள் தான், நிலக்கடலைக்கு வழக்கமாக சாண உரம் கிடைமட்டும் போடு வோம். ஆனால் இரண்டு களை கண்டிப்பாக எடுப்போம். களை எடுக்க எடுக்க பயிர் நன்றாக வளரும் மண்ணும் கிளறி விடுவதால் மண் இறுக்கம் இல்லாத நிலையில் பொல பொலப்பாக இருக்கும். இந்த தடவை நன்றாக அதுவும் பயிருக்கு தேவையான தருணங்களில் மழை பெய்தது. இந்த ஈரத்தை பயன்படுத்தி தான் ஊட்டச்சத்துகலவையை தெளிப்பு என் மகன் மூலமாக செய்தேன். அதாவது ஒரு கிலோ டிஏபி மற்றும் 400 கிராம் அம்மோனியம் சல்பேட் மற்றும் போராக்ஸ் 200 கிராம் 20 லிட்டர் நீரில் ஒன்றாக கலந்து, முதல் நாள் ஊறவைத்து, மறுநாள் இந்த கலவையை நன்றாக கரைத்து வடிகட்டி 180 லிட்டர் ( 12 குடம் ) தண்ணிய கலந்து தெளிக்கபட்டது. பின் 60நாட்களில் அறுவடை செய்தேன்.

முன்பெல்லாம் பொக்கு கடலை, சோடை கடலை, ஒரு கொட்டை கடலை போன்றவை தான் அதிகமாக இருக்கும். இந்த கலவை யை தெளித்தால் இந்த குறைபாடுகள் இல்லை. பொக்கு இல்லாத இரண்டு கொட்டை கடலை தான் அதிகமாக இருந்ததோடு, பருப்பு திரட்சியாக நன்றாக விளைந்து இருந்தது, கடலை தோடும் நன்றாக இருந்தது.எனக்கு இந்த ஊட்டசத்துகள் கரைசலை தெரியப்படுத்தி இலவசமாக கொடுத்த சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு நன்றி சொல்ல கடமைபட்டுள்ளேன் கூடுதலாக 3 மூட்டை கடலை விளைந்தால் வழக்கத்தைவிட 7000 ரூபாய் அதிகமாக கிடைத்தது என்பது எனக்குமட்டற்ற மகிழ்ச்சியாக உள்ளதாக பஞ்சக்கிளி தன்னுடைய அனுபவத்தை தெரிவித்தார்.




# வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய விழிப்புணர்வு முகாம்



அரியலூர், மார்ச் 14

அரியலூர் மாவட்டத்தில், புகைப் பிடித்தல் தடை தினத்தையொட்டி மார்ச் 12 அன்று திருச்சி தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண் புல இறுதி ஆண்டு மாணவர்கள், புகைப்பிடிப்பதால் உண்டாகும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இவர்கள் அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டத்தில் தங்கி பயிற்சி பெறும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தைச் சார்ந்த மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# திருவோணம் விவசாயிகளுக்கான அக்ரிஸ்டாக் திட்டம் [Agristack] தொடக்கம்!



தஞ்சாவூர், மார்ச் 14

விவசாயிகளுக்கான அக்ரிஸ்டாக் திட்டத்தின் (AGRISTACK) மூலம் அரசின் மானியத் திட்டங்கள் மற்றும் பலன்களை விவசாயிகள் பெற ஒரு தனிப்பட்ட அடையாள எண் விவசாயி களுக்கு உருவாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டமானது உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரையுள்ள அனைத்து தரவுகளையும் சேமிக்கும் நோக்கில் உருவாக்கப் படுகின்றன. இதன் ஒரு அங்கமாக, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு இத்திட்ட மானது திறம்பட செயல்பட வேளாண் துணை இயக்குனர் அய்யம்பெருமாள், விவசாயத்துறை உதவி இயக்குநர் தி.சுதா தலைமையில் மற்றும் அலுவலக அதிகாரிகள் உடன் வேளாண் கல்லூரி மாணவர்கள் கலந்துக் கொண்டனர். மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி களிலுள்ள விவசாயிகளின் தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இத்திட்டத்தின் கீழ் வட்டார வேளாண் அதிகாரிகள் மற்றும் துணை வேளாண் அதிகாரிகள் வெற்றிகரமாக பணியாற்றி வருகின்றனர். அவர்களிடமிருந்து கிராம தங்கல் திட்டத்தின் (RAWE) கீழ் பயிற்சி பெறும் சமயபுரத்தைச் சேர்ந்த தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்களான ஆதித்தியன், அனந்தகுமார், தனுஷ், கவின், ஹரிஹரன், ரஞ்சித், பிரேம்குமார், செல்வமணி, சுதர்சன் மற்றும் விமல் ஆகியோர் அக்ரிஸ்டாக் திட்டத்தின் (AGRISTACK) பயன்கள் மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்து கொண்டு விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் பலன்கள் பற்றி விவசாயிகளிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினர்.

விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் அலுவலர்களைத் தொடர்புக் கொண்டு இத்திட்டத்தில் இணைந்து விவசாயம் சார்ந்த திட்டங்கள் மற்றும் சேவைகளைத் தடையின்றி பெற இப்போதே பதிவு செய்யுங்கள்...!!! அக்ரி ஸ்டாக் (AGRISTACK) திட்டத்தில்!

# ஆப்பிள் சான் ஜோஸ் ஸ்கேல் [Quadraspidiotus perniciosus] ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை



**சான் ஜோஸ் ஸ்கேல் என்றால் என்ன?**

- சான் ஜோஸ் ஸ்கேல் என்பது ஒரு பூச்சியாகும், இது ஆப்பிள் மரங்களை பாதிக்கும் முக்கிய பொருளாதாரமான தொற்றுப் பூச்சியாக செயல்படுகிறது.
- இவை பொதுவாக கிளைகள், இலைகள் மற்றும் மற்றும் காய்கள் போன்ற மரத்தின் பல பகுதிகளில் வாய்ந்து அவற்றின் சிறப்பை உறிஞ்சும்.
- இதனால் மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது மற்றும் பழத்தின் தரம் குறைகின்றது.

**சான் ஜோஸ் ஸ்கேல் பற்றிய முக்கிய தகவல்கள்**

- இந்த பூச்சி சிறிதாகவும், சிறிய கருப்பு அல்லது சாம்பல் நிறத்தில் உள்ள தழும்புகளாக தோன்றும்.
- பெண் பூச்சிகள் பூச்சியின் ஒட்டு உரையுடன் ஒட்டிக்கொண்டு இருக்கும். இது அவற்றை வானிலை மாற்றங்களிடம் இருந்து பாதுகாக்கின்றது.

**சான் ஜோஸ் ஸ்கேல் தோற்றம்**

- சான் ஜோஸ் ஸ்கேல் பூச்சி முதன் முதலில் அமெரிக்காவின் சான் ஜோஸ் நகரில் கண்டறியப்பட்டது. இதனால் இதற்கு அந்த நகரின் பெயர் சூட்டப்பட்டது.
- 1870களில், கலிபோர்னிய மாநிலத்தின் சான் ஜோஸ் பகுதியில் தோட்டங்களில் இது பரவியது.
- அப்போது இதை அமெரிக்காவிற்கு சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்ட பழ மரங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தாக கூறப்படுகிறது.
- பின்னர் இது வேகமாக உலகம் முழுவதும் பரவி, பல்வேறு நாடுகளின் தோட்டப்பரப்புகளை பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தியது
- இந்தியா உட்பட பல நாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட மரங்கள் மற்றும் பழங்கள் மூலமாக பரவியது.

**சான் ஜோஸ் ஸ்கேல் இந்தியாவில் எப்போது வந்தது**

- சான் ஜோஸ் ஸ்கேல் இந்தியாவில் முதன் முதலில் பஞ்சாப் மாநிலத்தில் 1911 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது
- இது இந்தியாவிற்கு வெளிநாடுகளில் இருந்து ஆப்பிள் மற்றும் பேரிக்காய் மரங்கள் கொண்டுவரப்பட்டதின் மூலம் அறிமுக மாகியதாக அறியப்படுகிறது.

**பரவல் வழி**

- இந்த பூச்சி இந்தியாவிற்கு ஐரோப்பா அல்லது அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட தோட்ட மரங்கள் மூலம் வந்தது.
- பஞ்சாபில் இருந்து பிற மாநிலங்களுக்கு பரவியது குறிப்பாக இமய மலைக்கு அருகில் உள்ள நீர் பகுதிகளில்.

**பின்னர் பரவிய இடங்கள்**

- பஞ்சாப் மாநிலத்தை தொடர்ந்து, பூச்சி இமாச்சல் பிரதேசம் ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் பிற வட இந்திய மாநிலங்களில் பரவியது.
- ஆப்பிள் தோட்டங்கள் அதிகம் உள்ள இந்த பகுதிகளில், இது பெரிய சேதத்தை உண்டாக்கியது.

**சான் ஜோஸ் ஸ்கேல் தமிழ்நாட்டில் எப்போது வந்தது**

- இந்த பூச்சி தமிழ்நாட்டில் முதன் முதலில் 1928 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.
- அது முதலில் தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பரவியது. அங்கு ஆப்பிள், பேரிக்காய் போன்ற பழ மரங்கள் அதிகமாக பயிரிடப்பட்டிருந்தன.
- நீலகிரி குளிர்ச்சியான பருவநிலை, இந்த பூச்சி வாழ வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலை உருவாக்கியது.
- பின்னர், பாதிக்கப்பட்ட மரங்களின் மூலம் இந்த பூச்சி மற்ற பகுதிகளுக்கு பரவியது, மேலும் தமிழ்நாட்டின் தோட்ட பயிர்களுக்கு சில பகுதிகளில் பெரும் சேதத்தை உண்டாக்கியது.

**இந்த பூச்சியால் மனிதர்களுக்கு நோய் ஏற்படுமா?**

- சான் ஜோஸ் ஸ்கேல் பூச்சி ஆப்பிள் பழங்களில் நேரடி நோய்களை ஏற்படுத்தவில்லை, ஆனால் இவ்வாறு பாதிக்கப்பட்ட பழங்கள் சாப்பிடும் போது மனிதர்களுக்கு எந்த ஒரு நோயும் ஏற்படாது.

- இந்த பூச்சி ஆப்பிள் மரங்களின் சிறப்பை உறிஞ்சுவதன் மூலம் பழங்களின் தரத்தை குறைக்கும்.

- ஆனால் இது மனிதர்களுக்கு விசம் அல்லது பாதிப்புகளை ஏற்படுத்தாது.

**சேத அறிகுறிகள்**

**இலைகளில்**

- இலைகள் மஞ்சளாகி நேரத்திற்கு முன் உதிர்ந்து விடும்.

- இலைகளின் மேற்பரப்பில் சிறிய கருப்பு அல்லது சாம்பல் நிறப்புள்ளிகள் காணப்படும்.

- இலைகள் வாடி மரத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் குறையும்.

**பழங்களில்**

- ஆப்பிள் பழங்களில் சாம்பல் அல்லது கருப்பு நிற தடயங்கள் காணப்படும்.

- பழங்கள் முழுமையாக வளராமல் சிறிதாக இருக்கும்.

- மேற்பரப்பில் கடினமான தழும்புகள் உருவாகும் அவை அழகியும் சந்தை மதிப்பையும் குறைக்கும்.

**மரத்தின் உட் சிறப்பு இழப்பு**

- பூச்சிகள் சிறப்பை உறிஞ்சுவதால் மரத்தின் ஆரோக்கியம் மற்றும் வளர்ச்சி தடைப்படும்.

- மரம் மெதுவாக வாடி கடைசியில் முழுவதுமாக செத்துவிடும்.

**பாதிப்பின் தாக்கம்**

- மரத்தின் உற்பத்தித்திறன் குறையும்.

- பழங்களில் தரமும் அளவும் குன்றி பொருளாதார இழப்பை உண்டாக்கும்.

**சான் ஜோஸ் ஸ்கேல் பூச்சியின் வாழ்க்கை சுழற்சி முறை**

**முட்டை பருவம் (Egg Stage)**

- பெண் பூச்சிகள் உட்புறமாக முட்டை உற்பத்தி செய்து நேர்த்தியாக இளம் புழுக்களை வெளியிடுகின்றன.

- ஒவ்வொரு பெண் பூச்சியும் பல நூறு முட்டைகளை உருவாக்கும்.

**இளம்புழு பருவம் (Grawler Stage)**

- இளம் புழுக்கள் மிகவும் சுருட்டப்பட்டு நிலையில் இருக்கும்.
- இதை மரத்தின் கிளைகள் இலைகள் மற்றும் பழங்களுக்கு பரவி சிறப்பை உறிஞ்ச தொடங்குகின்றன.
- இதுவே மரத்தின் முதன்மை சேதத்தை ஏற்படுத்தும் கட்டமாகும்.

**கூட்டுப்புழு பருவம் (Setting Stage)**

- புழுக்கள் சிறிய நாட்களுக்கு பிறகு ஒரு இடத்தில் ஒட்டி இருந்து பூச்சியின் ஒட்டு உரை உருவாக்குகின்றன.
- இது அவற்றை வெளிப்புற மண்டலத்திலிருந்து பாதுகாக்கிறது.

**உருவ மாற்றம் (Maturation)**

- சுமார் 30 -40 நாட்களில் இளம் பூச்சிகள் ஆண் மற்றும் பெண் பூச்சிகளாக வேறுபடுகின்றன.
- ஆண் பூச்சிகள் சிறிய கருப்பட்டையில் சிறகுகளுடன் பறக்கும் தன்மை கொண்டவை.
- பெண் பூச்சிகள் சிறகுகள் இன்றி ஒரு இடத்தில் ஒட்டி இருக்கும்

**இனப்பெருக்கம் (Reproducation)**

- ஆண் பூச்சிகள் பெண் பூச்சிகளை fertilize செய்கின்றன.
- Fertilization ஆன பின்னர் பெண் பூச்சிகள் மீண்டும் புழுக்களை உருவாக்கி வாழ்க்கை சுற்றத்தை தொடங்குகின்றன.

**குறிப்புகள்**

- சூழலின் அடிப்படையில் சான் ஜோஸ் ஸ்கேல் ஆண்டுக்கு 3-4 தலைமுறைகள் உருவாக்க முடியும்.
- சூடான மற்றும் ஈரமான இடங்களில் இது வேகமாக வளர்கிறது.

**சுழற்சி அடிப்படையிலான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை**

**பரிசோதனை மற்றும் கண்காணிப்பு**

- இளங்குழிகள் பெரும்பாலும் முட்டைகள் முடிந்த 7-10 நாட்களில் வெளியே வரும் அதனால் இந்த நிலையில் பரிசோதனை செய்ய வேண்டும்.
- தடுப்பு முறைகளை ஆரம்பிக்கும் போது மரத்தின் கிளைகள் மற்றும் பழங்களின் பொதுவாக படிக்கள் மற்றும் சிறிய பூச்சிகள் உள்ளனவா என கண்டறிய வேண்டும்.

- கொடியில் மட்டும் பயன்களின் மேற்பரப்பில் பாதிப்புகளை கவனமாக நோட்டமிட வேண்டும்.

**இயற்கை விரோதிகள் (Biological Control)**

- சில இயற்கை விரோதிகள் எதிரான நன்மைகளை வழங்குகின்றன.
- ஒட்டுண்ணிகள் (Encarsia perinciosi) போன்ற பூச்சிகள் சான் ஜோஸ் ஸ்கேல் கொன்றும் மைக்ரோஸ்கோப்பிக் பூச்சிகள் மற்றும் பூச்சி தொலைப்பார்த்தியில் ஆகியவை இயற்கையாக கட்டுப்படுத்து உதவுகின்றன.

**இயந்திர கட்டுப்பாடு (Mechanical Control)**

- பாதிக்கப்பட்ட கிளைகளை வெட்டி எறிதல் மூலம் சான் ஜோஸ் ஸ்கேல் பரவலாகாமல் இருந்து தடுக்கலாம்.
- வெட்டி அகற்றுதல் மற்றும் உள்நாட்டு தோட்ட பராமரிப்பு நடைமுறைகள் இதற்கு முக்கியமானவை.




**பூச்சிக்கொல்லிகள் (Chemical Control)**

- பூச்சிக்கொல்லிகள் சில நேரங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன குறிப்பாக இளங்குழிகள் கட்டத்தில்.
- சைபர் மித்ரின் (Cypermethrin), மாலத்தியூன் (Malathion) போன்ற நாகரீகப் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தப்படுகின்றன.
- பூச்சிக் கொல்லிகளை அதிக அளவில் பரவ விடாமல் நேரத்திற்கான சுழற்சி கட்டுப்பட்டு பரிசோதிக்க வேண்டும்.

**நாளை தொடரும்...**

கட்டுரையாளர்கள் : **பிருந்தா, நான்காம் ஆண்டு (2021 Batch) மற்றும் முனைவர் செ.பழனிவேல், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, துறையூர், திருச்சிராப்பள்ளி.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.